அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ii) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) மசோதா

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை இப் பேரவையின்முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவை தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த நிதிக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலே எங்களுடைய 'கட் மோஷன்'களை நாங்கள் பிரஸ் செய்யப் போவதில்லை. ஆனால் எங்களுடைய 'கன்சென்ட்' கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு மணிக்கு மேலே எந்த வெட்டுத் தீர்மானமும் பிரேரேபிக்கப்படுவதில்லை.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

x தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) மசோதா

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, "1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இம் மசோதாவை அறிமுகம் செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறு கின்றன. நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பிற் பகல் 1–37 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

@ 162. Notification issued with No. 156959/67/F1, dated the 25th March 1968, in regard to the extension of certain provisions relating to the building regulations of the Madras District Municipalities Act, 1920, to the Andipatti Town Panchayat, Madurai district. (Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]